


தலைமைச் செயலகத்தில் நேற்று (10.10.2025) நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் தலைமையில் நீர்வளத்துறையில் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டப் பணிகள் குறித்து மாநில அளவிலான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், நீர்வளத்துறை செயலாளர் ஜெ.ஜெயகாந்தன், காவிரி தொழில்நுட்பக் குழுமம் மற்றும் பன்மாநில நதிநீர்ப் பிரிவின் தலைவர் இரா. சுப்பிரமணியன், நீர்வளத் துறையின் சிறப்புச் செயலாளர் சு. ஸ்ரீதரன், நீர்வளத் துறையின் முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) சு.கோபாலகிருஷ்ணன் மற்றும் நீர்வளத் துறை உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூர் சட்டமன்றத் தொகுதி காஞ்சிபுரம் மாநகராட்சிக்கு உட்பட்ட 50, 51 வாடுகளில் உங்களுடன் ஸ்டாலின் முகாமில் மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு முகாமை பார்வையிட்டு நல திட்டங்களை வழங்கினார். உடன் மேயர் திருமதி. மகாலட்சுமி யுவராஜ், மாநகராட்சி ஆணையர் பாலசுப்பிரமணியன், மண்டல குழு தலைவர் திருமதி.சாந்தி சீனிவாசன், பகுதி செயலாளர் அ.தசரதன், வ.மலர் மண்ணன், மாமன்ற உறுப்பினர்கள் பி.சங்கர், ப.சுரேஷ், எம்.சங்கர் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலி உரை!

# 10 ஆயிரம் கிராமப் பஞ்சாயத்துகளில் இன்று நேரடி ஒளிபரப்பு!

## அமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் அறிக்கை!

சென்னை, அக்.11-

சென்னை, அண்ணா பல்கலைக்கழக வளாக, சர். சி.வி. ராமன் அறிவியல் கட்டிட iTNT Hub அலுவலகத்தில் தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர். பழனிவேல் தியாகராஜன் அன்று, வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு :-



தற்போதுள்ள நிலையில், 11,800க்கும் மேற்பட்ட கிராம பஞ்சாயத்துகள் கண்ணாடி இழை கம்பி வடம் (OFC) வழியாக இணைக்கப்பட்டுள்ளன.

முதலமைச்சர் அவர்கள் அக்டோபர் 11ஆம் தேதி அன்று நடைபெறவுள்ள கிராம சபைக் கூட்டத்தில், காணொளிக் காட்சி (VC) வாயிலாகக் கலந்து கொண்டு உரையாற்ற உள்ளார்.

இந்த மாதம் 11ஆம் தேதி நடைபெற உள்ள கிராம சபை கூட்டத்தின்போது, அமைக்கப்பட்டுள்ள OFC உள்கட்டமைப்பைப் பயன்படுத்தி, முதலமைச்சர் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட கிராம பஞ்சாயத்துகளில்உள்ளபிரதிநிதிகளுடன் நேரடி காணொலி உரையாடல் நடத்துவார்கள்.

இது மாநிலம் முழுவதும் உள்ள 10,000 கிராம பஞ்சாயத்துகளுக்கு நேரலையாக ஒளிபரப்பப்படும்.

தொழில் பங்கீட்டாளர்களைத் தேர்ந்தெடுப்பதில் மாற்றங்கள்:

தொடக்கத்தில், கிராம பஞ்சாயத்து வாரியாகச் சேவை வழங்குநர்களை (Franchisee Partners) தேர்ந்தெடுப்பதற்காக அறிவிப்பு வெளியிடப்பட்டது. கிராம பஞ்சாயத்து வாரியான அறிவிப்பிற்குத் தகுதியானவர்களிடம் இருந்து குறைந்த அளவிலான ஆர்வமே வெளிப்பட்டது.

கிராம பஞ்சாயத்து வாரியாகச் செயல்பட்டால் வருவாய் குறைவு மற்றும் வீட்டு இணைப்புகளுக்கும், நெட்வொர்க் பராமரிப்புக்கும் போதுமான வருவாய் ஈட்டுவது சவாலாக இருக்கும். ONT (Optical Network Terminal) நிறுவுவதற்கான செலவை பொதுமக்களிடம் இருந்து வசூலிக்க வேண்டிய சூழல் இருந்தது.

மேற்கண்ட குறைகளைச் சரிசெய்து, தற்போது மாவட்ட அளவில் ஒருங்கிணைந்த மேலாண்மைக் கட்டமைப்பை உருவாக்குவதே இலக்காகும். கிராம பஞ்சாயத்து வாரியாகத் தொழில் பங்கீட்டாளர்களைத் தேர்ந்தெடுப்பதற்குப் பதிலாக மாவட்ட வாரியாகத் தொழில் பங்கீட்டாளர்களைத் தேர்ந்தெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதன் மூலம், பொதுமக்களிடம் அதிகக் கட்டணம் வசூலிக்காமல், குறைந்த செலவில் ONT கருவிகளை நிறுவி, தரமான இணையச் சேவையை வழங்குவது உறுதி செய்யப்படும். மக்கள் பெரிய அளவில் முதலீடு செய்யாமல் தரமான இணையச் சேவையைப் பெறுவதே இதன் நோக்கம்.

விரைவில் கிராமப் பகுதிகளில் உள்ள இல்லங்களுக்கு இணைய மற்றும் OTT சேவைகளை ஏற்படுத்தி தருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.




### ஒன்றிய அரசு அளவில

# தமிழ்நாடு இரத்த தானத்தில் முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்!

சென்னை, அக்.11–

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில் நேற்று (10.10.2025) சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனை கூட்டரங்கில், தேசிய தன்னார்வ இரத்த தான நாள் 2025 விழிப்புணர்வு உறுதிமொழி ஏற்கப்பட்டு, தன்னார்வ இரத்த தான முகாம் அமைப்பாளர்களுக்கும், வாழ்நாளில் 50 முறைக்குமேல் தன்னார்வ இரத்த கொடையாளர்களுக்கும், அதிக அளவில் தன்னார்வ இரத்த கொடையாளர்களை இணையவழியில் பதிவு செய்தவர்களுக்கும் பாராட்டு சான்றிதழ் மற்றும் நினைவுப் பரிசுகளை வழங்கி சிறப்பித்தார்கள்.

பிறகு அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:–

தேசிய தன்னார்வ இரத்த தான தினம் இன்று மிகச் சிறப்பாக அனுசரிக்கப்பட்டது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சீரிய வழிகாட்டுதலின் படி, தமிழ்நாட்டில் உள்ள அனைத்து துறைகளிலும் பல்வேறு மக்கள் நலப் பணிகள் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகிறது. அந்த வகையில் ஒன்றிய அளவில், ”தமிழ்நாடு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையானது பிற மாநிலங்களுக்கு தன்னார்வ இரத்ததானத்தில் முன்னோடி மாநிலங்களில் ஒன்றாக திகழ்கிறது.

**101 அரசு இரத்த மையங்கள்!**

இந்த ஆண்டிற்கான தேசிய தன்னார்வ இரத்த தான தினத்தின் கருப்பொருள் ”இரத்த தானம் செய்வோம், நம்பிக்கை கொடுப்போம், ஒன்றாக இணைந்து நாம் மனித உயிர்களைக் காப்போம் (Give Blood, Give Hope: Together We Save Lives) என்பதாகும். தமிழ்நாட்டில் மொத்தம் 101 அரசு இரத்த மையங்கள் மற்றும் 252 தனியார் இரத்த மையங்கள் செயல்பட்டு வருகிறது.

அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் 415 இரத்த சேமிப்பு மையங்கள் செயல்பட்டு வருகின்றது. அதுமட்டுமின்றி, தமிழகத்தில் இரத்தம் தேவைப்படும் அனைவருக்கும் பாதுகாப்பான மற்றும் தரமான இரத்தம் உரிய நேரத்தில் கிடைத்திடும் வகையில் அதிநவீன மற்றும் குளிர்சாதன வசதிகளுடன் கூடிய 32 நடமாடும் இரத்த ஊர்திகளும் மற்றும் 2 நடமாடும் இரத்த தான ஊர்திகளும் (Mobile Bus) சென்னை மற்றும் மதுரை மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றது. 202425 ஆம் ஆண்டு அரசு மற்றும் தனியார் இரத்த மையங்கள் மூலமாக, 9.50 இலட்சம் இரத்த அலகுகள் சேகரிக்கப்பட்டுள்ளன.

புதுடெல்லியிலுள்ள சுகாதார பொது இயக்குநரகத்தால் 202425 ஆம் ஆண்டில், 4.50 இலட்சம் இரத்த அலகுகள் சேகரிக்க அரசு இரத்த மையங்களுக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. அந்த ஆண்டில், உரிமம் பெற்ற அரசு இரத்த மையங்களில், தன்னார்வ இரத்ததான முகாம் ஒருங்கிணைப்பாளர்கள் மூலமாக, 4,354 இரத்ததான முகாம்கள் நடத்தப்பட்டு, 4.53 இலட்ச இரத்த அலகுகள் சேகரிக்கப்பட்டு, தமிழ்நாடு 101 விழுக்காட்டை அடைந்துள்ளது.

பொதுவாக மருத்துவர்கள் கூற்றின்படி நம் ஒவ்வொருவரின் உடலிலும், சுமார் 5 லிட்டர் இரத்தம் உள்ளது. இந்த இரத்ததானத்தின்போது 350 மி.லி. முதல் 450 மி.லி. இரத்தம் மட்டுமே எடுக்கப்படுகிறது. 18 வயது முதல் 65 வயது வரை உள்ள ஆரோக்கியமான ஆண் 3 மாதத்திற்கு ஒரு முறையும், பெண் 4 மாதத்திற்கு ஒரு முறையும் இரத்ததானம் செய்யலாம் என்று அறிவுறுத்தப்படுகிறது.

இரத்ததானம் செய்வதால், உடலில் புதிய அணுக்கள் உருவாகி, தானம் செய்வோரின் உடல்நலனும் காக்கப்படுகிறது என்று மருத்துவர்கள் எடுத்துரைக்கின்றனர். தமிழ்நாட்டில், இரத்த மையங்களின் செயல்பாடுகளை கண்காணிப்பதற்காக eRatKosh என்ற வலைதளம் செயல்பாட்டில் உள்ளது. இதில் இரத்த வகைகளின் இருப்பைத் தெரிந்துகொள்ளும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. பொதுமக்கள், இதனை பயன்படுத்தி, தங்களுக்கு தேவைப்படும் நேரங்களில் எளிதில் இரத்தம் பெற்றுக் கொள்ளலாம். தன்னார்வ இரத்ததானத்தின் அருமையை வலியுறுத்தும் நோக்கில், ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் திங்கள் முதல் நாள், ‘தேசிய தன்னார்வ இரத்ததான தினமாக’ கொண்டாடப்படுகிறது.



**தன்னார்வலர்களுக்குப் பாராட்டு!**

மாவட்ட அளவிலான, தேசிய தன்னார்வ இரத்த தான தின நிகழ்வில், அனைத்து மாவட்டங்களிலும் உள்ள இரத்ததான முகாம் ஒருங்கிணைப்பாளர்களின் செயல்களை பாராட்டி, அந்தந்த மாவட்ட ஆட்சியர் அவர்களால் கௌரவப்படுத்தப்பட்டனர். அதே போல், மாநில அளவிலான நிகழ்வில், ஒவ்வொரு அரசு இரத்த மையங்களிலிருந்து, அதிக இரத்ததான முகாம்கள் மூலம், அதிக இரத்த அலகுகள் சேகரிக்க உறுதுணையாக இருந்த இரத்ததான முகாம் ஒருங்கிணைப்பாளர்கள் கௌரவப்படுத்தப்படுகின்றனர். அந்தவகையில் இன்று 150 அமைப்புகள், தன்னார்வலர்கள், அமைப்புகள், மையங்கள் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

ஏற்கனவே செப்டம்பர் 17 முதல் அக்டோபர் 2 வரை 527 சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு, 18,264 புதிய இரத்ததான கொடையாளர்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளனர். அவர்களின் வாயிலாக கடந்த 2 மாதங்களில் மட்டும 14,847 அலகுகள் இரத்தம் கொடையாக பெறப்பட்டுள்ளது. இன்று நடைபெறும் நிகழ்ச்சியில் ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரி, சென்னை மருத்துவக் கல்லூரியின் செவிலியர் பயிற்சி பள்ளி மற்றும் கல்லூரிகள், நியூ கல்லூரி இராயப்பேட்டை, ஆர்.கே.நகர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி போன்ற கல்வி நிறுவனங்களில் இருந்து 268 மாணவ மாணவியர்கள் குருதி கொடையை தந்து சிறப்பித்துக்கொண்டிருக்கிறார்.

**கோல்ட்ரிஃப் இருமல் மருந்து தடை மற்றும் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள்!**

பொதுவாக குற்றச்சம்பவங்கள் எங்கு நடந்ததோ அந்த மாநில காவல் துறையினரே நடவடிக்கையினை எடுப்பார்கள். அக்டோபர் 1–ஆம் தேதி நிகழ்வு நடைபெற்றவுடன் தமிழ்நாடு அரசு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு முதன்மைச் செயலாளர் அவர்கள் கோல்ட்ரிஃப் சிரப் என்ற மருந்தை ஆய்வுக்கு உட்படுத்தியிருக்கிறார். அதில் டைஎதிலீன் கிளைகால் (Diethylene Glycol, DEG) அளவு 1% கூட இருக்க கூடாது என்ற நிலையில் 48% அதிகமாக இருப்பது கண்டறியப்பட்டு உடனடியாக மத்திய பிரதேச அரசுக்கு தெரியபடுத்தப்பட்டது. ஆனால் மத்திய பிரதேசத்தை சேர்ந்த சுகாதார அலுவலர்கள், ஒன்றிய அரசின் அலுவலர்கள் இது நல்ல மருந்து என்று குறிப்பிட்ட நிலையிலும் தமிழ்நாடு அரசுதான் இது நச்சுத்தன்மை அதிகம் உள்ள மருந்து என்று கண்டுபிடித்தது. மற்ற மாநிலங்களிலும் பாதிப்பு ஏற்படக்கூடாது என்று ஒடிசா மற்றும் புதுச்சேரி மாநிலங்களுக்கும் இதன் விவரங்கள் அனுப்பப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசின் மருத்துவ சேவை கழகம் (TNMSC) இந்த மருந்தினை கொள்முதல் செய்வதில்லை, தனியாரும் இந்த மருந்தினால் பாதிக்கப்படக்கூடாது என்று உடனடியாக தடை விதிக்கப்பட்டுள்ளது. இவை அனைத்தும் சம்பவம் நடந்து 48 மணி நேரத்திற்குள் செய்யப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. 3.10.2025 அன்றே சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு உற்பத்தி நிறுத்துவதற்கான ஆணை கொடுக்கப்பட்டுள்ளது. 10 நாட்கள் அவர்கள் பதில் வழங்க வேண்டும் இல்லையென்றால் அவர்களின் உரிமம் இரத்த செய்யப்படும் என்று அந்த அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.

இந்நிலையில் 7.10.2025 அன்று குற்றநடவடிக்கைக்கான அறிவிப்பு கொடுக்க சென்றபோது அந்த நிறுவனத்தின் உரிமையாளர் தலைமறைவாகிவிட்டார். இருந்தாலும் தமிழ்நாடு அரசின் காவல்துறையின் உதவியுடன் மத்தியப் பிரதேச அரசு காவல் துறை அந்த உரிமையாளரை கைது செய்தது என்பது குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து அந்த நிறுவனம் இனி மேல் இயங்காத வகையில் முழுமையாக மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வருடமும் மருந்து உற்பத்தி செய்யும் நிலையங்களில் ஆய்வு மேற்கொள்ள வேண்டும் கட்டாயமாகும். கடந்த 3 ஆண்டுகளாக ஒன்றிய அரசின் மருந்து ஆய்வு செய்யும் குழுவினர் எந்த விதமான ஆய்வையும் மேற்கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது

தமிழ்நாட்டில் இருந்து மட்டும் ஒவ்வொரு ஆண்டும் ஏறத்தாழ 100 நாடுகளுக்கு 12,000 கோடியிலிருந்து 15,000 கோடி வரை மருந்து ஏற்றுமதி வர்த்தகம் நடைபெற்று வருகிறது. தமிழ்நாட்டில் மட்டும் 397 மருந்து தயாரிக்கும் நிறுவனங்கள் உள்ளது. தற்போது நடந்த இந்த பிரச்சனை ஒரு மிகப்பெரிய பிரச்சனையாகும், இதனை அரசியல் ஆக்கி பொது விவா தங்களில் அதிகமாக விவாதிப்பது என்பது நாகரீகமாக இருக்காது என்பதை எதிர்கட்சித் தலைவர் அவர்கள் புரிந்துகொள்ளவேண்டும். 2015 முதல் 2021 வரை CAG அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்கள் குறித்து பதில் சொல்ல வேண்டியர் எதிர்கட்சி தலைவர் எடப்பாடி பழனிச்சாமி ஆவார்.

இவ்வாறு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர்.ப. செந்தில்குமார், தமிழ்நாடு மாநில குருதி பரிமாற்று குழும திட்ட இயக்குநர் திருமதி.ஆர்.சீத்தாலட்சுமி, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை இயக்குநர் மரு.ஏ.சோமசுந்தரம், மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.ஆர்.சுகந்தி இராஜகுமாரி, பெருநகர சென்னை மாநகராட்சி நகர நல அலுவலர் மரு.ஜெகதீசன், தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை இயக்குநர் மரு.மணி மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.






பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி குரோம்பேட்டையில் விரைவில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட உள்ள ராதா நகர் சுரங்கப்பாதை இறுதி கட்டப் பணிகளை மாவட்ட கழகத் துணைச் செயலாளர் இ.கருணாநிதி எம்.எல்.ஏ. ரயில்வே நெடுஞ்சாலைத்துறை காவல்துறை தாம்பரம் மாநகராட்சி ஆகிய துறை அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்டார். பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர விரைந்து பணிகளை முடித்துத் தருமாறு அதிகாரிகளிடம் கேட்டுக்கொண்டார். அப்பொழுது மண்டலத் தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை, மாமன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள், வியாபார பெருங்குடி மக்கள், நல்வாழ்வு சங்க நிர்வாகிகள் ஆகியோர் உடன் இருந்தனர்.